# சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்
# MCOP .No.238/2025

**நாள் : 27.04.2026**

**எ.ம.சா.2** (3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.அபிநயா | மாவட்டம் | : | சென்னை |
| தந்தை பெயர் | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 27 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | சட்ட மேலாளர் |
| வட்டம் | : | சென்னை | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை:**

நான் எஸ் பி ஐ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அந்த வகையில் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு பரிச்சையம். 3ஆம் எதிர்மனுதாரர் சார்பாக இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1) TN 83 Z 7898 என்ற ஆட்டோவின் காப்பீட்டு ஒப்பந்த நகல் எ.ம.சா.ஆ.1

2) 3ஆம் எதிர்மனுதாரர் நிறுவன விசாரணை அறிக்கை எ.ம.சா.ஆ.2

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோவானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த பாலிசி Liability only policy என்று சாட்சி கூறுகிறார். மேற்படி ஆட்டோ கமர்சியல் வாகனம் என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளானது விபத்தில் காயம்பட்டு இறந்த நபரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுப்பதை தவிர்க்கவேண்டி தெரிவிக்கப்பட்ட தவறான சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல.

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வழக்கு சம்பந்தமாக ஆவணங்கள் ரீதியாகத்தான் தெரியவரும் என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவின் பாலிசி மற்றும் மோட்டார் வாகன விதிகளின்படி 4 நபர்கள் மட்டுமே பயணிக்கக்கூடிய வாகனம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அளவுக்கு அதிகமாக 9 பயணிகளை ஏற்றிச் சென்ற நிலையில் எதிரில் வந்த அரசு பேருந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனவே மனுதாரர்களுக்கு எங்களது நிறுவனம்தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.